# உடன்பிறப்பே... 88

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ஆலவயல் சுப்பையா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

ஓவியம் : ரவி பேலட்



# ‘வெள்ளை உள்ளம்!’

## ஆலவயல் சுப்பையா

‘ஆலவயல்’ சுப்பையா அவர்களை நானும் நன்றாக அறிவேன். நீங்களும் நன்றாக அறிவீர்கள். முரட்டுத்தனமான கொள்கைப் பிடிப்பு உள்ளவர் என்றாலும்கூட, அந்த முரட்டுத்தனம் சில பேரை அருகேயும் வர வைத்திருக்கிறது. சில பேரை கொஞ்சம் விலகியும் செல்ல வைத்திருக்கிறது என்பதை நானும் அறிவேன், நீங்களும் அறிவீர்கள். அவருடைய முகத்தைப் பார்த்தாலே, அவருடைய சுபாவம் தெரியும். எப்பொழுது பார்த்தாலும் கொஞ்சம் கோபக் குறியோடுதான் அவருடைய முகம் காணப்படும். ஆனால், உள்ளம் அப்படி அல்ல, அது ‘வெள்ளை உள்ளம்’ என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு ஆலவயல் சுப்பையா. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், பொன்னமராவதி பகுதிகளில் கழகம் காத்தவர்.

‘கழகப் பணியில் அவரை விஞ்சிய இன்னொருவர் திருமயம் தொகுதியில் இல்லை என்ற அளவிற்குப் பெயர் பெற்றவர்’ என இன்றைய கழகத் தலைவரால் புகழப்பட்டவர் ஆலவயல் சுப்பையா. பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், திருமயம் சட்டமன்ற உறுப்பினர் என ஒரே நேரத்தில் இரண்டு பொறுப்புகளில் திறம்படச் செயல்பட்டவர். தொகுதி மக்களை நாடிச் சென்று, அவர்களின் குறைகளை அறிந்து, கழகம் ஆளுங்கட்சியாக அமர்ந்தபோதெல்லாம் அவற்றைத் தீர்த்து வைத்தவர். ‘தொகுதியில் அவர் செய்துள்ள நலத் திட்டங்கள் - இன்றைக்கும் அவருடைய பெயரைச் சொல்லும்’ என்று குறிப்பிடுகின்றனர் அப்பகுதி மக்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அருகில் உள்ள ஆலவயல் எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். 1951-ஆம் ஆண்டு ஜூலை 19 -ஆம் தேதி பிறந்தவர். தந்தையார் பெயர் வடமலை, தாயார் பெயர் சிகப்பி அம்மாள். விவசாயக் குடும்பப் பின்புலம் என்றாலும், அன்றைய காலகட்டத்திலேயே பி.ஏ பட்டம் பெற்றவர். கொப்பனாப்பட்டி மு.நாராயணன் செட்டியார் பள்ளியில் பள்ளிப் படிப்பும், திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கலைக்கல்லூரியில் பி.ஏ பட்டமும் பெற்றவர்.

கல்லூரிப் படிப்பு படிக்க வந்த காலத்திலேயே, திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அதே நேரத்தில் குடும்பச் சூழல் காரணமாக, சில ஆண்டுகள் மலேசியாவில் வேலை செய்யும் நிலை ஏற்பட்டாலும், பின்னர் தாயகம் திரும்பியதும், கழகத் தொடர்புகளைத் தீவிரமாக்கிக் கொண்டு செயல்படலானார். மாவட்டக் கழகத்தின் பெரியண்ணன் ஆகியோருடன் இணைந்து செயல்படலானார்.

கழகத்தின் தென்மண்டல அமைப்புச் செயலாளராக இருந்த முன்னோடி எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் வழிகாட்டுதல்களைப் பெற்றவராக சுப்பையா, திருமயம் பகுதிகளில் கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார்.

### நெருக்கடி காலத்தில் தலைமை

1977-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் கலைஞரின் தலைமையை சிலர் கேள்வி எழுப்பி, கலகக் குரல் எழுப்பிய நேரத்தில், ‘திராவிட இயக்கத்தின் எதிர்காலம் கலைஞர்தான்’ என, தனது 26 வயதில் கலைஞருடன் பயணிக்கத் தொடங்கினார். முதல் பொறுப்பாக மாவட்டக் கழகப் பிரதிநிதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கழகத்தினரிடம் சிறப்பாகவும், துடிப்போடும் பணியாற்றும் செயல்வீரர் எனப் பெயர் பெற்றார். இலங்கைத் தமிழர் பிரச்சினை, இந்தித் திணிப்பு எதிர்ப்பு உள்ளிட்ட கழகப் போராட்டங்களில் சளைக்காமல் களம் கண்டவர்.

தனது 35 வது வயதில் 1986-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பொறுப்பிற்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு, மக்களிடத்தில் நேரடி வாக்குகளில் வெற்றிபெற்றார். அந்த வெற்றி, கலைஞரின் அரசியல் எழுச்சிக்குக் கிடைத்த வெற்றி, அதைத் தலைவரிடமே கொண்டு வந்து சேர்த்தார் இந்தத் தொண்டர்.

1991-ஆம் ஆண்டுவரை, அவர் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகப் பணியாற்றிய காலத்தில், கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மக்களின் தேவைகளை அன்றைக்கு இருந்த அரசிடம் போராடிப் பெற்றதும், கழகம் ஆட்சியில் அமர்ந்தபோது, கலைஞரிடம் உரிமையோடு பெற்றதும் வரலாறு.

1989-ஆம் ஆண்டு தேர்தலில் தென் மாவட்டங்களில் கழக வெற்றிக்குப் பொறுப்பேற்ற எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள், ஆலவயல் சுப்பையாவை திருமயம் தொகுதியில் போட்டியிட வைக்கலாம் என்று, கலைஞரிடத்தில் கேட்டுக்கொண்டார். அதனை ஏற்று,

**‘கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் எளிதில் அணுகும் வகையில் கட்சிப் பணியிலும், பொதுப் பணியிலும் மிகுந்த முனைப்போடு பாடுபட்டு வந்தவர்.**

சுப்பையாவை வேட்பாளராக கலைஞர் அறிவித்த அன்றே, வெற்றி உறுதி செய்யப்பட்டது. ஆம், நான்கு முனைப் போட்டியாக நடைபெற்ற அந்தத் தேர்தலில் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று, சட்டமன்றத்தில் இடம் பிடித்தார்.

38 வது வயதில் திருமயம் சட்டமன்ற உறுப்பினராகவும், ஒன்றியப் பெருந்தலைவராகவும் ஒரே நேரத்தில் பணியாற்றி, இரண்டிலும் நற்பெயர் பெற்றவர். குறிப்பாக, அந்த ஆட்சிக் காலகட்டத்தில் கலைஞர் கொண்டுவந்த எண்ணற்ற திட்டங்களை, திருமயம் தொகுதியில் நடைமுறைபடுத்த தீவிரம் காட்டியவர் சுப்பையா.

### ‘கட்சிப் பணி இருக்குல்ல’

1996-ஆம் ஆண்டு தேர்தலின்போதும் திருமயம் தொகுதியில் சுப்பையா போட்டியிடுவதற்கான வாய்ப்பு இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் கூட்டணிக் கட்சிக்கு அந்தத் தொகுதியை அளிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. தொகுதியில் கழகத்தின் வெற்றியைக் காண விரும்பிய சுப்பையா, வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றதும், அந்த வருத்தத்துடன் தலைவரைச் சந்திக்க வந்துள்ளார். தலைவர் அவர்கள், ‘என்னய்யா ஆலவயல்?’ என்று கேட்டுள்ளார். அப்போது உடனிருந்த அன்றைய கழகப் பொருளாளர் ‘ஆர்க்காட்டார்’ அவர்கள், ‘சீட் கிடைக்கவில்லை என உங்களைப் பார்க்க வந்துள்ளார்’ எனக் கூறி இருக்கிறார். அதற்குத் தலைவர், ‘சீட் இல்லையென்றால், என்னய்யா? கட்சி இருக்குல்ல; அந்த வேலையைப் பார்’ என்று தட்டிக் கொடுத்து அனுப்பி இருக்கிறார். இப்படித் தலைவரிடத்தில் உரிமை கொண்ட தளகர்த்தராக, கழகப் பணியில் கண்ணியம் காத்த கடமை வீரராக இருந்தவர்.

1996-ஆம் ஆண்டு, ஆலவயல் சுப்பையா இல்ல நிகழ்ச்சியில் தலைவர் பேசிய உரை, ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக் குரலாக இன்றைக்கும் காணொலிக் காட்சியாக உலா வருகின்றது. அப்போதும், ‘என் நெஞ்சில் இடம் பெற்ற தம்பி, அன்பு உடன்பிறப்பு ஆலவயல் சுப்பையா’ என கலைஞர் போற்றிப் புகழ்ந்தார்.

ஒன்றியப் பெருந்தலைவர், திருமயம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எனச் செயல்பட்டிருந்தாலும், கழகப் பொறுப்புகளில் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்டத் துணைச் செயலாளர், மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் என கட்சிப் பொறுப்புகளில் கழகத்தினரை அரவணைத்துச் செல்லும் அவரது பண்பு இன்றும் நினைவுகூரப்படுகிறது.

### முனைப்பான வீரர்

2020-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23-ஆம் தேதி தனது 69-வது வயதில் திடீர் உடல்நலக்குறைவு காரணமாக, தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார். பொன்னமராவதி, திருமயம் பகுதி மக்களின் அன்புக்குரிய கழகத் தொண்டர் மறைவுக்கு, கழகத்தலைவர் எழுதிய இரங்கல் கடிதம், அவரது உழைப்பை உயர்த்திப் பிடித்தது.

‘கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் எளிதில் அணுகும் வகையில் கட்சிப் பணியிலும், பொதுப் பணியிலும் மிகுந்த முனைப்போடு பாடுபட்டு வந்தவர். மிக முக்கியப் பங்காற்றியவர். ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் நலனுக்காகப் போராடும் கழகத்தின் முன்னணி களவீரராக விளங்கியவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பிற்கும், எனது பாசத்திற்கும் உரிய ஆலவயல் சுப்பையா’ என்று குறிப்பிட்டதுடன், அன்றைய ஊரடங்கு நெருக்கடி காரணமாக காணொலி வழியாக, படத்தைத் திறந்து வைத்து புகழைப் போற்றினார். புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தின் முக்கியத் தளகர்த்தரின் நினைவுகள், கழக வரலாற்றில் நீங்காது என்றும் நிறைந்திருக்கும்.

**...துடிக்கும்**

## குஜராத் மாடலின் பரிதாபம்!

இந்தியாவில் பொது விநியோக உணவுப் பொருட்களை அதிக அளவில் வீணடிக்கும் முதல் 3 மாநிலங்களில் ஒன்று குஜராத். அதேபோல வறுமை ஒழிப்பில் மிக மோசமான செயல்பாட்டைக் கொண்ட மாநிலமாக குஜராத் இருப்பதாக 2 மாதங்களுக்கு முன்பு ‘நிதி ஆயோக்’ அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்நிலையில், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்க முடியாத மாநிலமாகவும் குஜராத் இருப்பது, ஒன்றிய பா.ஜ.க. அரசு அளித்துள்ள தரவுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

ஒன்றிய குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமைச்சகம் அளித்துள்ள தரவுகளின்படி, குஜராத்தில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 40.8 சதவிகிதத்தினர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 7.8% குழந்தைகள் கடும் பட்டினிக்கொடுமைக்கு ஆளாகின்றனர். ஆனால், ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்குவதற்கான போஷான் அபியான் 2.0 திட்டத்தின்கீழ், கடந்த 3 ஆண்டுகளில் குஜராத் மாநிலத்திற்கு ரூ.2 ஆயிரத்து 879.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2021-22-இல் ரூ.839.86 கோடி, 2022-23-இல் ரூ.912.64 கோடி, 2023-24-இல் ரூ.1,126.8 கோடி என ஆண்டுக்கு ஆண்டு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், இத்திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு ஆண்டு பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை சரிந்துகொண்டே வருகிறது. 2021-22-இல் 42 லட்சத்து 87 ஆயிரத்து 408 குழந்தைகள் இத்திட்டத்தால் பலனடைந்துள்ள நிலையில், 2022-23-இல் 40 லட்சத்து 47 ஆயிரத்து 17 பேர்களாகவும், 2023-24-இல் 37லட்சத்து 82 ஆயிரத்து 803 பேர்களாகவும் குறைந்துள்ளனர். ‘நிதியை அதிகம் பெற்றுக்கொண்டு, பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, ஊட்டச்சத்து பாதிப்பை அதிகரிக்கச் செய்வதுதான் குஜராத் மாடலா?’ என்ற கேள்வியை எழுப்புகின்றனர், ஜனநாயகவாதிகள்.

## ஃப்ளாஷ்பேக்



செ.யோகஸ்ரீ



### 4-வது தலைமுறையாக கழகம்!

எனது கொள்ளுத் தாத்தா ம.கருப்பு அவர்கள், சேலம் மாவட்டம், தொங்கலானூர் கிளைச் செயலாளராக இருந்தவர். இந்தி எதிர்ப்பு உள்பட, கழகப் போராட்டம் பலவற்றில் பங்கெடுத்தவர். என்னுடைய தாத்தா க.தனக்கோட்டி, சேலம் மத்திய மாவட்டம், கொண்டலாம்பட்டி பகுதி-59 கோட்டக் கழகப் பிரதிநிதியாக இருந்தார். எனது தாயார் தகவல் தொழில்நுட்ப அணியில் ஒன்றிய-பகுதி ஒருங்கிணைப்பாளராக இருந்தார். நான்காம் தலைமுறையாக நான், இளைஞர் அணியின் ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப் போட்டியில் தேர்வுபெற்று, கழக மேடை ஏறி வருகிறேன். இந்தப் படம், 2019-ஆம் ஆண்டு, கழகத்தலைவரும் நமது முதலமைச்சருமான தளபதி அவர்களைச் சந்திக்க எனது பெற்றோர், எங்களையும் அழைத்துச் சென்றபோது எடுக்கப்பட்டது. நலம் விசாரித்த தலைவர் அவர்கள், என் தம்பி இளஞ்சூரியனின் சட்டை பாக்கெட்டின் மேல் இருந்த கருப்பு சிவப்பு நிறக் கொடியைப் பார்த்து, ‘இது என்ன?’ என்று கேட்டார். ‘இது என்னுடைய கட்சி’ என்று கூறினான். அதற்குத் தலைவர் அவர்கள், ‘அப்படியா?’ என்று கூறி மகிழ்ச்சியடைந்தார். எனது வளர்ச்சியைத் திரும்பிப் பார்க்க வைக்கும் புகைப்படமாக இது திகழ்கிறது.

**- செ.யோகஸ்ரீ, கழக இளம் சொற்பொழிவாளர், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தமிழிசையும் பெரியாரும்!

1930-ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கத்தின் 2-வது மாநாட்டில் இரண்டு நாட்களும், தமிழிசை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார் பெரியார். அதன் நோக்கம் பார்ப்பனர் அல்லாத கலைஞர்கள் மதிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு மற்றவர்களும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதுதான். ‘குடி அரசு’ ஏட்டில் தமிழிசைப் பாடல்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும், தமிழ்ப் பாடல்களை கலைஞர்கள் பாட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

689

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.